Puducherry / Regional Bulletin / Tamil /18.10hrs / 02.04.2026 / Script

**வணக்கம்**

**ஆகாஷ்வாணி-புதுச்சேரி**

**மாநிலச் செய்திகள்**

**வாசிப்பவர் : மலர்விழி**

**தேதி : 02.04.2026 – வியாழக்கிழமை நேரம் : மாலை 6.10 மணி**

---

*தலைப்புச் செய்திகள்*

நாட்டில், திறம்பட்ட, முற்றிலும் மக்களை மையமாகக் கொண்ட, **அரசு நிர்வாகம்** அவசியம் என்று, பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

நாட்டின் வருடாந்திர **பாதுகாப்பு ஏற்றுமதி**, முன் எப்போதும் இல்லாத அளவில், 38 ஆயிரத்து 424 கோடி ரூபாயாக அதிகரித்துள்ளது.

பிரதமர் திரு. நரேந்திர மோடி புதுச்சேரியில் தேசிய ஜனநாயக கூட்டணி வேட்பாளர்களுக்கு ஆதரவாக, நாளை **சாலை பவனி** நடத்த இருக்கிறார்.

புதுச்சேரியில், ஊழல், **போலி மருந்து உற்பத்தி** போன்ற பல பிரச்சனைகள் பெருகிவிட்டதாக, மூத்த காங்கிரஸ் தலைவர் திரு. முகுல் வாஸ்னிக் குற்றம் சாட்டினார்.

*மோடி கர்மயோகி 1 (05)*

இந்தியாவின் **தேசிய லட்சியங்கள்** வேகமாக மாறிவரும் இன்றைய சூழலில், திறம்பட்ட, முற்றிலும் மக்களை மையமாகக் கொண்ட, **அரசு நிர்வாகம்** அவசியம் என்று, பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார். **கர்மயோகி சாதனா வாரத்தை** ஒட்டி, இன்று வெளியிட்டுள்ள **வீடியோ செய்தி** ஒன்றில் அவர் இவ்வாறு கூறியுள்ளார். இது குறித்து கூடுதல் விவரங்கள்…

**(வாய்ஸ்)**

நாட்டில் தற்போதுள்ள அரசு நிர்வாகம், "மக்களே தெய்வம்" என்கிற கொள்கையின் அடிப்படையில் செயல்படுவதாகவும், மக்களை மையமாகக் கொண்ட,

திறம்பட்ட சேவையாக பொது சேவையை மாற்ற, முக்கிய கவனம் செலுத்தப் படுவதாகவும் பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறினார். நவீன திறன்கள் மற்றும் அர்ப்பணிப்பு உணர்வுடன், மக்களின் தேவைகளை உணர்ந்து செயல்படும் பணியாளர்களாக அரசு ஊழியர்களை மேம்படுத்துவதில், **திறன் கட்டமைப்பு ஆணையமும், கர்மயோகி இயக்கமும்** முக்கியப் பங்காற்றி வருவதை அவர் சுட்டிக்காட்டினார். முன்னேறிய இந்தியா ஒன்றை உருவாக்க, கட்டமைப்பு மற்றும் தொழில்நுட்ப **வசதிகள் மட்டுமே** போதாது என்றும், திறமையான, கடமைப் பற்றுடன் கூடிய மனித வளம் அவசியம் என்றும் அவர் வலியுறுத்தினார். மக்களின் வாழ்க்கையை எளிதாக்கி, வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதே, அரசு நிர்வாகத்தின் முக்கிய நோக்கமாக இருக்க வேண்டும் என்று பிரதமர் மேலும் கூறினார்.

*மோடி கர்மயோகி 3 (08 )*

**திறன் கட்டமைப்பு ஆணையம்** இன்று முதல், வரும் 8ஆம் தேதி வரை **கர்மயோகி சாதனா வாரம்** கடைபிடிக்கிறது. ஆணையத்தின் நிறுவன நாள், மற்றும், கர்மயோகி இயக்கத்தின் **ஐந்தாண்டு நிறைவை** ஒட்டி, இதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. **கர்மயோகி சாதனா வார** நிகழ்ச்சிகளின் போது, பல்வேறு மத்திய அமைச்சகங்கள், மாநிலங்கள், யூனியன் பிரதேசங்கள், மற்றும், 250-க்கும் மேற்பட்ட **சிவில் சர்வீஸ் பயிற்சி நிறுவனங்கள்**, திறன் கட்டமைப்புப் பணிகளில், தங்களை இணைத்துக்கொள்ள உள்ளன.

*பாதுகாப்பு ஏற்றுமதி (16 )*

கடந்த 2025-26ஆம் நிதியாண்டில் நாட்டின் பாதுகாப்பு ஏற்றுமதி, முன் எப்போதும் இல்லாத அளவில், 38 ஆயிரத்து 424 கோடி ரூபாயாக, 62.66 சதவிகிதம்

அதிகரித்துள்ளது. சிறப்பான இந்த சாதனையை எட்டுவதில் பொதுத்துறை பாதுகாப்பு நிறுவனங்கள் 54.84 சதவிகித அளவிற்கும், தனியார் துறையினர் 45.16 சதவிகித அளவிற்கும் பங்களித்து இருப்பதாக, பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது. கடந்த நிதியாண்டில் பொதுத்துறை பாதுகாப்பு நிறுவனங்களின் ஏற்றுமதி 151 சதவிகித அளிவிற்கும், தனியார் நிறுவனங்களின் ஏற்றுமதி 14 சதவிகித அளவிற்கும் அதிகரித்துள்ளன. நாட்டின் பாதுகாப்பு உற்பத்தி மற்றும் ஏற்றுமதியில் தனியார் துறையினரின் பங்களிப்பு அதிகரித்து வருவதற்கும், இந்திய பாதுகாப்பு உற்பத்திப் பொருட்கள், உலக அளவில் அங்கீகாரம் பெற்று வருவதற்கும் இதுவே சான்றாகும் என பாதுகாப்பு அமைச்சகம் கூறியுள்ளது.

பாதுகாப்பு உற்பத்தி துறையின் சாதனைகளை பாதுகாப்பு அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் பாராட்டியுள்ளார். பிரதமர் திரு, நரேந்திர மோடி தலைமையின் கீழ் இந்தியா, பாதுகாப்பு உற்பத்திக்கான உலக கேந்திரமாக மேம்பட்டு வருவதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

*தர்மேந்திர பிரதான் (12 )*

மத்திய கல்வி அமைச்சர் திரு. தர்மேந்திர பிரதான் இன்று புதுடெல்லியில், **வித்யா பாரதி** அகில இந்தியக் கல்விக் கழகத்தின் பிரதான அலுவலகமான **வித்யாபாரதி பவன்** கட்டிடத்தை திறந்து வைத்தார். **புத்தகப் பை இல்லாத பள்ளி வேலை நாள்**, தொடர்ச்சியான ஆசிரியர் பயிற்சி உட்பட **வித்யா பாரதி**யின் பல்வேறு நடைமுறைகள், தற்போது, தேசியக் கல்விக் கொள்கையில் சேர்க்கப்பட்டுள்ளதை அவர் சுட்டிக் காட்டினார். Ed-Tech என்னும் கல்வித் தொழில்நுட்பத்தில், பல்வேறு நிறுவனங்கள் வர்த்தக ரீதியில் செயல்பட்டு வரும் நிலையில், **வித்யா பாரதி** விரைவில், இலவசமாகவே ஒளிபரப்பி, இலவசமாகவே காணத் தகுந்த கல்வி நிகழ்ச்சிகளை, தயாரித்து வழங்க இருப்பதாக அமைச்சர் தெரிவித்தார். திறன் மேம்பாடு, கலை,

விளையாட்டு மற்றும் ஆளுமை மேம்பாடு தொடர்பான நிகழ்ச்சிகளும் இதில் அடங்கும் அவர் மேலும் கூறினார்.

*அமைதி காலம் தேர்தல் 1 (09)*

புதுச்சேரி யூனியன் பிரதேசத்தில் வரும் 9ஆம்தேதி வாக்குப்பதிவு முடியும் நேரமான மாலை 6 மணிக்கு முந்தைய 48 மணி நேரத்தில், வானொலி, தொலைக்காட்சி மற்றும் கேபிள் கட்டமைப்பில் ஒளிபரப்பாகும் எந்தவொரு நிகழ்ச்சியிலும், எந்தவொரு வேட்பாளர் அல்லது அரசியல் கட்சிக்கு சாதமாகவோ, தேர்தல் முடிவுகளைப் பாதிக்கும் வகையிலோ, எந்தவொரு உள்ளடக்கமும் இடம்பெறக் கூடாது என, தேர்தல் ஆணையம் அறிவுறுத்தியுள்ளது. கருத்துக் கணிப்பு முடிவுகளுக்கும் இந்த உத்தரவு பொருந்தும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இது குறித்து கூடுதல் விவரங்கள்…

**(வாய்ஸ்)**

*அமைதி காலம் தேர்தல் 2 (15)*

**(வாய்ஸ்)**

ஏப்ரல் 9ஆம் தேதி காலை 7 மணி முதல், ஏப்ரல் 29ஆம் தேதி மாலை 6.30 மணி வரையுள்ள காலகட்டத்தில், வாக்களித்து திரும்பும் வாக்காளர்களை அணுகி **கருத்துக் கணிப்பு** நடத்தவும், அதன் முடிவுகளை வெளியிடவும், அச்சு மற்றும் மின்னணு ஊடகங்களுக்கு தேர்தல் ஆணையம், தடை விதித்துள்ளது. வரும் 9ஆம் தேதி தேர்தல் நடைபெறவுள்ள, கேரளம் மற்றும் அஸ்ஸாமிற்கும், இந்த உத்தரவு பொருந்தும்.

வரும் 23ஆம் தேதி தேர்தல் நடைபெறவுள்ள தமிழகம், மற்றும், 23, 29 ஆகிய தேதிகளில் தேர்தல் நடைபெறவுள்ள மேற்கு வங்கத்திலும், வாக்குப்பதிவு முடியும் நேரத்திற்கு முந்தைய 48 மணி நேரத்தில் தேர்தல் விளம்பரங்களை வெளியிட, தடை விதிக்கப்பட்டுள்ளது. இதை மீறுவது, **மக்கள் பிரதிநிதித்துவ** சட்டத்தின்படி தண்டனைக்குரிய குற்றமாகும் என்றும், இத்தகைய குற்றத்திற்கு இரண்டாண்டுகள்

வரை சிறை தண்டனை, அல்லது, அபராதம், அல்லது இரண்டும் விதிக்கப்படலாம் என்றும் தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

*மோடி – செல்வம் (14 )*

பிரதமர் திரு. நரேந்திர மோடி புதுச்சேரியில் தேசிய ஜனநாயக கூட்டணி வேட்பாளர்களுக்கு ஆதரவாக, நாளை **சாலை பவனி** நடத்த இருக்கிறார். இதற்கென நாளை மாலை 4.15 மணிக்கு புதுச்சேரி வரும் பிரதமர், அஜந்தா சந்திப்பில் இருந்து 1.7 கிலோ மீட்டர் தொலைவிற்கு **சாலை பவனி** நடத்துவார் என்றும், இதில் சுமார் 30 ஆயிரம் பேர் பங்கேற்றவுள்ளதாகவும், சட்டப்பேரவைத் தலைவர் திரு. செல்வம் இன்று புதுச்சேரியில் செய்தியாளர்களிடம் கூறினார். நாளை மறுநாள் முன்னாள் தமிழ்நாடு பிஜேபி தலைவர் திரு. அண்ணாமலை, வரும் 5ஆம் தேதி பிஜேபி. தேசியத் தலைவர் திரு. நிதின் நபின் ஆகியோர் மணவெளி தொகுதியில் தேர்தல் பிரச்சாரம் மேற்கொள்ள இருப்பதாக அவர் மேலும் தெரிவித்தார். இதற்கிடையே, பிரதமர் திரு. நரேந்திர மோடியின் வருகையை ஒட்டி புதுச்சேரியில் விரிவான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. நாளைய தினம் புதுச்சேரியில் ட்ரோன்கள் மற்றும் பலூன்கள் பறக்கத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

*புதுச்சேரி – வாஸ்னிக் - 1 (19 )*

**பெஸ்ட் புதுச்சேரியை** உருவாக்கப் போவதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி வாக்குறுதி அளித்த போதிலும், கடந்த 5 ஆண்டுகளில் புதுச்சேரி, நாட்டிலேயே மிக மோசமாக நிர்வகிக்கப்படும் மாநிலமாகவே உருவெடுத்து இருப்பதாக, அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி பொதுச் செயலர் திரு. முகுல் வாஸ்னிக் குற்றம் சாட்டியுள்ளார். இன்று புதுச்சேரியில் செய்தியாளர் கூட்டம் ஒன்றில் பேசிய அவர், கடந்த சட்டமன்ற தேர்தலில் என்.ஆர். காங்கிரஸ்-பிஜேபி கூட்டணி அரசு பதவிக்கு வந்தது தான்,

புதுச்சேரியில், மனிதனால் உருவாக்கப்பட்ட மிக மோசமான பேரிடர் என்றார். புதுச்சேரியில் பெண்களுக்குப் பாதுகாப்பு இல்லை என்றும், மாணவர்களிடையே போதைப் பழக்கம் அதிகரித்து விட்டதாகவும், ஊழல், போலி மருந்து உற்பத்தி போன்ற பல பிரச்சனைகள் பெருகிவிட்டதாகவும் திரு. முகுல் வாஸ்னிக் குற்றம் சாட்டினார்.

புதுச்சேரியில், சட்டமன்ற தேர்தலுக்கான காங்கிரஸ் கட்சியின் தேர்தல் அறிக்கையை, கட்சித் தலைவர் திரு. மல்லிகார்ஜுன கார்கே, வரும் 4ஆம் தேதி வெளியிட இருப்பதாக, பிரதேச காங்கிரஸ் திரு. வைத்திலிங்கம் செய்தியாளர்களிடம் தெரிவித்தார். மூத்த காங்கிரஸ் தலைவர் திரு. ராகுல் காந்தி, வரும் 6ஆம் தேதி புதுச்சேரி யூனியன் பிரதேசத்தில் தேர்தல் பிரச்சாரம் மேற்கொள்ள இருப்பதாகவும் அவர் கூறினார்.

*புதுச்சேரி – வாஸ்னிக் - 2 (04 )*

பிரதமர் திரு.நரேந்திர மோடி நாளை புதுச்சேரி வரும் போது, **மாநில அந்தஸ்து கோரிக்கை** குறித்து எதுவும் பேசாவிட்டால், தேர்தலைப் புறக்கணிப்பது பற்றிப் பரிசீலிக்க, முதலமைச்சர் திரு. ரங்கசாமி தயாரா என்று திரு. வைத்திலிங்கம் மேலும் வினவினார்.

*புதுச்சேரி சிபிஎம் (08 )*

மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவரும், மத்திய குழு உறுப்பினருமான திரு. ஜி. ராமகிருஷ்ணன், புதுச்சேரி சட்டமன்றத் தேர்தலில் போட்டியிடும் இடது சாரி கூட்டணி வேட்பாளர்களுக்கு ஆதரவாக இன்றும் நாளையும் தேர்தல் பிரச்சாரம் மேற்கொள்கிறார். இன்று மாலை லாஸ்பேட் மற்றும் உழவர்கரை தொகுதியிலும், நாளை திருபுவனை தொகுதியிலும், சிபிஐ மற்றும் சிபிஎம் வேட்பாளர்களுக்கு ஆதரவாக அவர் வாக்கு சேகரிப்பதாக சிபிஎம் செய்திக் குறிப்பு ஒன்றில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

*புதுச்சேரி -விழிப்புணர்வு (10 )*

புதுச்சேரியில் மாவட்ட தேர்தல் அதிகாரி திரு. குலோத்துங்கன், இன்று சேதராப்பட்டு தொழிற்பேட்டையில் உள்ள ஒரு தனியார் தொழிற்சாலை ஒன்றில் தொழிலாளர்களை நேரில் சந்தித்து, தேர்தலில் தவறாமல் வாக்களிக்க வேண்டுகோள் கடிதம் கொடுத்தார். தொழிலாளர்கள் வாக்களிக்க சிறப்பு விடுமுறை அளிக்கப்பட்டு இருப்பதை அவர் சுட்டிக்காட்டினார். நாம் மட்டும் வாக்களித்தால் போதாது என்றும், மற்றவர்களையும் வாக்களிக்க ஊக்குவித்தல் அவசியம் என்றும், அவர் வலியுறுத்தினார். முன்னதாக, மாவட்ட தேர்தல் அதிகாரி அலுவலகத்தின் **தேர்தல் கீதம்** மற்றும் வாக்காளர் விழிப்புணர்வு கருத்துக்கள் அடங்கிய காணொளி, நிகழ்ச்சியின் போது திரையிடப்பட்டது.

*காரைக்கால் -விழிப்புணர்வு (09 )*

காரைக்காலில் 100 சதவிகித வாக்குப்பதிவை வலியுறுத்தி தேர்தல் ஆணையத்தின் **ஸ்வீப்** திட்டத்தின் கீழ் கரகாட்டக் கலை மூலம் வாக்காளர்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. மாவட்ட தேர்தல் அதிகாரி திருமதி இஷிதா ராட்டி அறிவுறுத்தலின் பேரில், நெய்வாச்சேரி, சேத்தூர், அம்பகரத்தூர் ஆகிய இடங்களில் இந்நிகழ்ச்சிகள் நடைபெற்றன. இதற்கிடையே, தேர்தலை முன்னிட்டு காரைக்காலில் கலால் துறை அதிகாரிகள் நடத்திய திடீர் சோதனைகளின் போது, மதுக்கடை ஒன்றில் காலாவதியான மதுபானம் விற்கப்படுவது கண்டறிப்பட்டு, கடைக்குச் சீல் வைக்கப்பட்டது.

*வானிலை (08 )*

இன்று தென் தமிழகத்தின் கடலோர மாவட்டங்கள், மற்றும், மேற்குத் தொடர்ச்சி மலை மாவட்டங்களில் லேசான மழை பெய்யக்கூடும் என்றும், தமிழகத்தின் இதர பகுதிகள், மற்றும், புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளில், வறண்ட வானிலை நிலவும் என்றும், சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளைப் பொருத்தவரை, நாளையும் நாளை மறுநாளும் வறண்ட வானிலை நீடிக்கும் என்றும், வரும் 5ஆம் தேதி முதல், 8ஆம் தேதி வரை, லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

*ஐபிஎல் (04 )*

ஐபிஎல் கிரிக்கெட்டில், இன்று மாலை கொல்கத்தாவில் நடைபெறும் போட்டியில், கொல்கத்தா-ஹைதராபாத் அணிகள் மோதவுள்ளன. நேற்று லக்னோவில் நடைபெற்ற போட்டியில், டெல்லி அணி, 6 விக்கெட் வித்தியாசத்தில், லக்னோ அணிக்கு எதிராக வெற்றி பெற்றது.

*காரைக்கால் பரிசு (10 )*

புதுடெல்லியில் கடந்த மாதம் நடைபெற்ற அகில இந்திய சிவில் சர்வீஸ் கலைப் போட்டிகளில் புதுச்சேரி மாநிலத்தின் சார்பில் பங்கேற்ற காரைக்கால் ஆசிரியர், கலைமாமணி ப. முருகன், நாட்டுப்புற தனி நடனத்தில் தங்கப் பதக்கமும், தனிப்பாடல் பிரிவில் வெண்கலப் பதக்கமும் வென்று சாதனை படைத்துள்ளார். இவருடன் இணைந்து பங்கேற்ற ஆசிரியர்கள் விஜயராகவன், செல்வம், ஆரோக்கிராஜ், சந்திரமணி ஆகியோர் பாராட்டுச் சான்றிதழ் பெற்றனர். மாநிலத்திற்கும்

மாவட்டத்திற்கும் பெருமை சேர்த்த இந்த வெற்றியாளர்களைக் காரைக்கால் மாவட்ட ஆட்சியர் திருமதி இஷிதா ராட்டி நேரில் அழைத்துப் பாராட்டினார்.

*இண்டியா போஸ்ட் (18 )*

இண்டியா போஸ்ட் நிறுவனம், நாட்டின் முக்கிய சரக்கு போக்குவரத்து சக்தியாக விரைந்து மேம்பட்டு வருவதாகவும், 2030ஆம் ஆண்டிற்குள் உலக அந்தஸ்துக்கு உயரும் நோக்குடன் இந்நிறுவனம் செயல்பட்டு வருவதாகவும் மத்திய தகவல் தொடர்புத் துறை அமைச்சர் திரு.ஜோதிராதித்யா சிந்தியா கூறியுள்ளார். இன்று புதுடெல்லியில், சகாரண்பூர் அஞ்சல் துறைப் பயிற்சி மையத்தின் 75ஆம் ஆண்டு நிறைவை ஒட்டி, நினைவுத் தபால் தலை வெளியிடும் நிகழ்ச்சியில் அவர் உரையாற்றினார். இம்மையம் கடந்த 75 ஆண்டுகளில் லட்சக் கணக்கிலான அஞ்சல் துறை ஊழியர்களுக்கு, சேவை, துல்லியம் மற்றும் செயல் திறன் பயிற்சிகளை வழங்கி இருப்பதை அவர் பாராட்டினார். ஆண்டுதோறும் சுமார் 30 ஆயிரம் பேருக்கு பயிற்சி அளிக்கும் இந்நிறுவனம், கர்மயோகிகளை உருவாக்கும் கேந்திரமே தவிர, வெறும் கட்டிடம் அல்ல என்றும் அவர் குறிப்பிட்டார். தொலைத் தொடர்புத் துறையில் பணிபுரிந்து ஓய்வு பெறும் ஊழியர்களுக்கான SAMPANN ஆன்லைன் ஓய்வூதிய கட்டமைப்பில் தங்களையும் இணைத்துக் கொள்வது தொடர்பாக, கோவா மாநில அரசும், கொச்சி துறைமுகப் பொறுப்புக் கழகமும், தொலைத் தொடர்புத் துறையுடன், இந்நிகழ்ச்சியின் போது உடன்பாடு செய்து கொண்டன.

*தலைப்புச் செய்திகள்*

நாட்டில், திறம்பட்ட, முற்றிலும் மக்களை மையமாகக் கொண்ட, **அரசு நிர்வாகம்** அவசியம் என்று, பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

நாட்டின் வருடாந்திர **பாதுகாப்பு ஏற்றுமதி**, முன் எப்போதும் இல்லாத அளவில், 38 ஆயிரத்து 424 கோடி ரூபாயாக அதிகரித்துள்ளது.

பிரதமர் திரு. நரேந்திர மோடி புதுச்சேரியில் தேசிய ஜனநாயக கூட்டணி வேட்பாளர்களுக்கு ஆதரவாக, நாளை **சாலை பவனி** நடத்த இருக்கிறார்.

புதுச்சேரியில், ஊழல், **போலி மருந்து உற்பத்தி** போன்ற பல பிரச்சனைகள் பெருகிவிட்டதாக, மூத்த காங்கிரஸ் தலைவர் திரு. முகுல் வாஸ்னிக் குற்றம் சாட்டினார்.

**இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது** RSS/SM/VM

Puducherry / Regional Bulletin / Tamil /18.10hrs / 02.04.2026 / Script